



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (4.3.2025) சென்னை ராயப்பேட்டை ஒய்.எம்.சி.ஏ மைதானத்தில் தமிழ்நாடு வக்ஃபு வாரியத்தின் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற இஃப்தார் (நோன்பு திறக்கும்) நிகழ்ச்சியில் கலந்து கொண்டு ஏழை, எளிய மக்களுக்கு உணவுப் பொருட்களை வழங்கினார். இந்நிகழ்வில் இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் எஸ்.எம்.நாசர், நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்நாடு வக்ஃபு வாரியத் தலைவருமான கே.நவாஸ்கனி, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சட்டமன்ற உறுப்பினரும் தமிழ்நாடு ஹஜ் கமிட்டி தலைவருமான பி. அப்துல் சமத், மாநில சிறுபான்மையினர் ஆணையத் தலைவர் ஜோ.அருண், துணைத் தலைவர் இறையன்பன் குத்தூஸ், தமிழ்நாடு வக்ஃபு வாரிய முதன்மை செயல் அலுவலர் (மு.கூ.பொ) மரு.தாரேஸ் அகமது, வக்ஃபு வாரிய உறுப்பினர் திருமதி.மு.ஆசியா மரியம், மற்றும் அரசு அலுவலர்கள், வக்ஃபு வாரிய உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

## இந்தியாவிலேயே சிறுபான்மை மக்கள் தங்களின்

# சொந்த வீடு போல இருக்கும் மாநிலம் தமிழ்நாடுதான்!

## சென்னையில் புனித ரமலான் நோன்பு திறப்பு நிகழ்ச்சியில் – துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பெருமிதம்!

**சென்னை,மார்ச்.6 –**

**புனித ரமலான் மாதத்தை முன்னிட்டு, முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் படி, தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தின் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற ரமலான் நோன்பு திறப்பு நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு வாழ்த்தி சிறப்புரையாற்றினார்.**

**இதைத் தொடர்ந்து அவர், 2500-க்கும் அதிகமான இஸ்லாமியப் பெருமக்களுக்கு நோன்பிற்குத் தேவையான பொருட்கள் அடங்கிய தொகுப்பினை, நேற்று முன்தினம் வழங்கி வாழ்த்திப் பேசினார்.**

**அப்போது அவர், ``சிறுபான்மை மக்களுக்கு திராவிட மாடல் அரசு, என்றும் அவர்களுக்குப் பாதுகாப்பு அரணாக இருக்கும்” என வாழ்த்துரை வழங்கினார்.**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:**

தமிழ்நாடு வக்பு வாரிய ஏற்பாட்டில் நடக்கின்ற இந்தச் சிறப்புக்குரிய நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி மற்றும் புனித ரமலான் நோன்பு திறக்கும் நிகழ்ச்சியில் பங்கேற்று உங்களை எல்லாம் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

### ரமலான் வாழ்த்துகள்

முதலில் உங்கள் அனைவருக்கும் என் புனித ரமலான் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். ரமலானுக்கு நாம் வாழ்த்து சொல்வதைப் பார்த்தால், சில பேருக்குக் கோபம் வரும். அதை பற்றியெல்லாம் நமக்கு எந்தக் கவலையும் இல்லை. இதற்காக சிலருக்குக் கோபம் வருகிறது என்றால், இன்னும் நூறு முறைகூட ரமலான் வாழ்த்துகளைச் சொல்லிக்கொண்டே இருப்போம்.

இன்றைக்கு வக்பு வாரியத்தின் சார்பாக, ரம்ஜான் நோன்புக்குத் தேவையான தொகுப்புகளைக் கொடுக்கிறோம். இதற்காக 25-க்கும் அதிகமான தர்காக்கள், அந்தப் பொருட்களை நன்கொடையாகக் கொடுத்து இருக்கின்றனர். அதற்கு, அந்த தர்காவின் நிர்வாகத்துக்கும், அதன் நிர்வாகிகளாக இருக்கின்ற அத்தனை நல் உள்ளங்களுக்கும் அரசின் சார்பாக எங்களின் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

### உங்களின் சொந்த வீடு

இந்தியாவிலேயே இன்றைக்கு சிறுபான்மை மக்கள் உங்களின் சொந்த வீடு போல இருக்கிற ஒரு மாநிலம் என்றால், அது நம் தமிழ்நாடுதான் என்று நாம் தைரியமாகச் சொல்லலாம். சிறுபான்மை மக்களின் மனதில், பெரும்பான்மை இடத்தைப் பிடித்த ஒரு அரசு என்றால், அது நம் திராவிட மாடல் அரசுதான். அதற்கு உங்களிடம் இருக்கின்ற மகிழ்ச்சியும், பாசமுமே சாட்சி. திராவிட இயக்கத்துக்கும் – இஸ்லாமிய மக்களுக்குமான உறவு இன்று நேற்று தொடங்கிய உறவு கிடையாது. பெரியவர் மறைந்த கண்ணியமிகு காயிதே மில்லத் அவர்களின் காலத்தில் இருந்தே திராவிட இயக்கம் இஸ்லாமிய மக்களின் அன்பைப் பெற்று செயல்பட்டு வருகிறது.

குறிப்பாக, கலைஞர் அவர்களின் மீது பெரியவர் காயிதே மில்லத்துக்கு மிகப்பெரிய அளவில் மரியாதையும், மதிப்பும் இருந்தது. அதே போல கலைஞர் அவர்களும், காயிதே மில்லத் அவர்களும் உற்றத் தோழர்களாக இருந்தார்கள். ஏன் இதை சொல்கிறேன் என்றால், காயிதே மில்லத் அவர்கள் இறுதிகாலத்தில் உடல்நலம் சரி இல்லாமல் மருத்துவமனையில் இருந்த நேரம்.

கலைஞர் – காயிதே மில்லத்

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், பெரியவர் காயிதே மில்லத் அவர்களிடம் உடல்நலம் விசாரிக்க மருத்துவமனைக்குச் சென்றிருந்தார். அங்கே கலைஞர் அவர்களின் கைகளைப் பற்றிக் கொண்ட பெரியவர் காயிதே மில்லத் அவர்கள், ``நீங்கள் இஸ்லாமிய சமுதாய மக்களுக்கு செய்துகொண்டு இருக்கின்ற நன்மைகளுக்கு நான் எவ்வளவு நன்றி சொன்னாலும் போதாது”என்று காயிதே மில்லத் அவர்கள் கலைஞரின் கரங்களைப் பிடித்துக்கொண்டு சொன்னார்.




அந்த அளவுக்கு கலைஞர் அவர்கள் இஸ்லாமிய மக்கள் நலனில் அக்கறையோடு இருந்தார்கள். இன்றைக்கு கலைஞர் அவர்களின் வழியில்தான் நம் முதலமைச்சர் அவர்களும், இஸ்லாமியப் பெருமக்களுக்கு அனைத்து வகையிலும் துணை நின்று வருகிறார். கழக அரசு ஆட்சிக்கு வந்தவுடன், குடியுரிமைத் திருத்தச் சட்டத்தை ஒன்றிய அரசு திரும்பப் பெற வேண்டும் என்று முதன்முதலில் சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றியவர் நம் முதலமைச்சர் அவர்கள். குடியுரிமைத் திருத்தச் சட்டம் மட்டுமல்ல, ஒன்றிய அரசு, சிறுபான்மை மக்களுக்கு எதிராக என்னென்ன செய்யலாம் என்று தொடர்ந்து திட்டம் போட்டு, எதையாவது செய்துகொண்டே இருக்கிறது.

### ஒன்றிய அரசு

குறிப்பாக, `முத்தலாக் சட்டம்', `என்.ஆர்.சி.', இப்படி வருடந்தோறும் ஏதாவது ஒரு சிக்கலை ஏற்படுத்தி, சிறுபான்மை மக்களை நெருக்கடிக்கு ஆளாக்குகின்ற வேலையை ஒன்றிய அரசு செய்து வருகிறது. ஆனால், அதை எல்லாம் இந்தியாவிலேயே கடுமையாக எதிர்க்கின்ற ஓர் இயக்கம் என்றால், அது திராவிட முன்னேற்றக் கழகம்தான், நம் முதலமைச்சர் அவர்கள்தான். குறிப்பாக, இன்றைக்கு ஒரு புது பிரச்சினையைக் கையில் எடுத்து வந்திருக்கிறார்கள். வக்பு வாரிய திருத்த மசோதா என்ற ஒரு விஷயத்தை நடைமுறைப்படுத்தத் துடித்துக்கொண்டு இருக்கிறார்கள்.

அந்த திருத்தம் மட்டும் அமலுக்கு வந்தது என்றால், வக்பு வாரிய சொத்துக்கள், வக்பு வாரியங்களிடம் இருந்து அபகரிக்கப்படுகின்ற அபாயம் இருக்கிறது. அதுமட்டுமல்ல, வக்பு வாரியங்களுக்கு ஒன்றிய அரசு சொல்கின்ற ஆட்களைத்தான் நியமனம் செய்ய வேண்டும் என்று இந்த மசோதா சொல்கிறது.

குறிப்பாக, முஸ்லிம் அல்லாத நபர்களையும், வக்பு வாரிய உறுப்பினர்களாகச் சேர்க்கக் கூடிய சூழல் உருவாக இருக்கிறது. அதனால்தான் நம் தலைவர் அவர்கள், இந்தச் சட்டத்தை தொடக்கத்திலிருந்து கடுமையாக எதிர்த்து வருகிறார்.

### கழக அரசு செய்தவை!

இஸ்லாமிய மக்களுக்கு எந்த அளவுக்குத் திட்டங்களை நம் கழக அரசு செயல்படுத்திக் கொண்டு இருக்கிறது என்பதை இங்கு நினைவுபடுத்த விரும்புறேன். திராவிட முன்னேற்றக் கழகம் முதல்முறை ஆட்சிக்கு வந்த போது, `மிலாது நபி'க்கு விடுமுறை தந்தவர் நம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். உருது பேசும் முஸ்லிம் மக்களைப் பிற்படுத்தப்பட்ட மக்கள் பட்டியலில் சேர்க்கப்பட்டதும் கலைஞர் ஆட்சியில்தான். வக்பு வாரிய சொத்துக்களைப் பராமரிக்க முதன்முதலில் மானியம் ஒதுக்கியது, திராவிட முன்னேற்றக் கழக அரசுதான். தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம், உருது அகாடமியைத் தொடங்கியது நம் அரசில்தான்.




துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (4.3.2025) சென்னை ராயப்பேட்டை ஒய்.எம்.சி.ஏ மைதானத்தில் தமிழ்நாடு வக்ஃபு வாரியத்தின் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற இஃப்தார் (நோன்பு திறக்கும்) நிகழ்ச்சியில் கலந்து கொண்டார். இந்நிகழ்வில் இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் எஸ்.எம்.நாசர், நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்நாடு வக்ஃபு வாரியத் தலைவருமான கே.நவாஸ்கனி, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சட்டமன்ற உறுப்பினரும் தமிழ்நாடு ஹஜ் கமிட்டி தலைவருமான பி. அப்துல் சமத், மாநில சிறுபான்மையினர் ஆணையத் தலைவர் ஜோ.அருண், துணைத் தலைவர் இறையன்பன் குத்தூஸ், தமிழ்நாடு வக்ஃபு வாரிய முதன்மை செயல் அலுவலர் (மு.கூ.பொ) மரு.தாரேஸ் அகமது, வக்ஃபு வாரிய உறுப்பினர் திருமதி.மு.ஆசியா மரியம், மற்றும் அரசு அலுவலர்கள், வக்ஃபு வாரிய உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

கண்ணியமிகு காயிதே மில்லத் நினைவாக, அவருக்கு மணிமண்டபம் கட்ட நிதி ஒதுக்கியதும், திராவிட முன்னேற்றக் கழகம்தான். காயிதே மில்லத் மகளிர் கல்லூரியை உருவாக்கியதுடன் காயிதே மில்லத் ஆண்கள் கல்லூரிக்கும் இடம் அளித்தது நம் அரசு.

> **கண்ணியமிகு காயிதே மில்லத் நினைவாக, அவருக்கு மணிமண்டபம் கட்ட நிதி ஒதுக்கியதும், திராவிட முன்னேற்றக் கழகம்தான். காயிதே மில்லத் மகளிர் கல்லூரியை உருவாக்கியதுடன் காயிதே மில்லத் ஆண்கள் கல்லூரிக்கும் இடம் அளித்தது நம் அரசு. இஸ்லாமிய மக்களுக்காக இவை அனைத்தையும் செய்தவர், நம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.**

இஸ்லாமிய மக்களுக்காக இவை அனைத்தையும் செய்தவர், நம் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள்.

பொதுவாக, சாதிகளின் அடிப்படையில் இட ஒதுக்கீடு வழங்கப்படுவது வழக்கம். ஆனால், மதத்தின் அடிப்படையில் இட ஒதுக்கீட்டை வழங்கிய ஒரே தலைவர் நம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான். இந்தியாவே திரும்பிப் பார்க்கின்ற வகையில், பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில், இஸ்லாமியர்களுக்கு 3.5 சதவிகிதம் உள் ஒதுக்கீட்டை கொடுத்தவர் டாக்டர் கலைஞர் அவர்கள்.

இப்படி கலைஞர் அவர்கள் தனது ஆட்சிக் காலத்தில் சிறுபான்மை மக்களுக்குச் செய்த சாதனைகளை சொல்லிக்கொண்டே போகலாம். இந்த 4 ஆண்டு கால ஆட்சியில் நம் முதலமைச்சர் அவர்களும் எண்ணற்ற திட்டங்களை இஸ்லாமிய மக்களின் நலனுக்காகத் தொடர்ந்து செயல்படுத்தி கொண்டு வருகிறார்.

கிட்டத்தட்ட 33 கோடி ரூபாய் மதிப்பில் பல்வேறு வகையான இஸ்லாமிய பள்ளிவாசல்கள், தர்காக்கள், கட்டடங்கள் புனரமைப்பு செய்யப்பட்டு இருக்கிறது.

### திராவிட மாடல் அரசு

நம் முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு சார்பில், நாகூர் சந்தனக்கூடு விழாவுக்கு 45 கிலோ சந்தனக் கட்டைகளை வழங்கினார். அதற்காக தர்கா நிர்வாகிகள் அனைவரும் முதலமைச்சரை சந்தித்து நன்றி தெரிவித்தார்கள். அதுமட்டுமல்ல, நாகூர் தர்காவுக்கும் நேரில் வர வேண்டும் என்று எனக்கு அழைப்பு விடுத்தார்கள். அவர்களின் அழைப்பை ஏற்று, நான் சென்ற ஆண்டு நவம்பர் மாதம் நாகூர் தர்காவுக்குச் சென்று சந்தனக்கூடு விழா ஏற்பாடுகளை ஆய்வு செய்தேன்.

அதுமட்டுமல்ல, நம் அரசு சார்பில், நாகூர் தர்காவைப் புனரமைக்க 2 கோடி ரூபாய் ஒதுக்கபட்டு, அதற்கான பணிகளும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. முக்கியமாக, ஹாஜிக்களுக்கு மாதம் 25 ஆயிரம் ரூபாய் சிறப்பு நிதி என்று இதுவரை 3 கோடியே 13 லட்சம் ரூபாய் வழங்கப்பட்டு இருக்கிறது. முஸ்லிம் மாணவிகளுக்கு 12 கோடியே 17 லட்சம் ரூபாய் அளவுக்கு கல்வி உதவித்தொகை என்று நம் முதலமைச்சர் அவர்கள் பல்வேறு திட்டங்களை இஸ்லாமிய மக்களுக்காகத் தொடந்து நிறைவேற்றிக்கொண்டு இருக்கிறார்.

### ரூ.65 கோடியில் ஹஜ் இல்லம்

ரம்ஜானுக்காக பள்ளிவாசல்களுக்கு ஆண்டுதோறும் பல ஆயிரம் டன் அரிசியை நம் முதலமைச்சர் அவர்கள் வழங்கி வருகிறார். சென்றாண்டு 7 ஆயிரத்து 40 டன் வழங்கப்பட்ட நிலையில், இந்த ஆண்டு அது அதிகப்படுத்தப்பட்டு 8 ஆயிரம் டன் அளவுக்கு அரிசி வழங்க நம் முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார். இதன் மூலமாக அரசுக்கு 18 கோடியே 42 லட்சம் ரூபாய் அளவுக்குக் கூடுதல் செலவினம் ஏற்பட்டாலும், அதைவிட, இஸ்லாமிய மக்களின் மகிழ்ச்சியே எனக்கு முக்கியம் என்று இந்த உத்தரவை நம் முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டு இருக்கிறார்.

நேற்று கூட நாகப்பட்டினத்தில் ஒரு முக்கியமான அறிவிப்பை, நம் முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டார். ஹஜ் புனித யாத்திரை செல்லும் இஸ்லாமியர்களின் வசதிக்காக, சென்னை விமான நிலையம் அருகே நங்கநல்லூரில் ரூபாய் 65 கோடி மதிப்பீட்டில் `ஹஜ் இல்லம்' கட்டப்படும் என்று நம் முதலமைச்சர் அவர்கள் அறிவித்து இருக்கிறார்.

இப்படி எப்போதும், உங்களுக்காக சிந்தித்து, உங்களுக்கான திட்டங்களை தருகின்ற அரசுதான் நம் திராவிட மாடல் அரசு என்பதை நீங்கள் உணர்வீர்கள். இந்த நேரத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் சொன்ன ஒரு விஷயத்தை இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன்.

இஸ்லாமியர்களுக்கு 3.5 சதவிகிதம் உள இட ஒதுக்கீட்டினைத் தந்ததற்காக, கலைஞர் அவர்களுக்கு ஒரு நன்றி அறிவிப்பு விழாவை, இஸ்லாமிய பெருமக்கள் ஏற்பாடு செய்து இருந்தார்கள். அப்போது பேசிய கலைஞர் அவர்கள், “இங்கே எனக்கு நீங்கள் எல்லாம் நன்றி சொல்லிப் பேசினீர்கள். எனக்கு நன்றி சொல்லி, என்னை உங்களிடம் இருந்து பிரித்து விடாதீர்கள். நான் உங்களில் ஒருவன், உங்களைச் சார்ந்தவன்”என்று கலைஞர் அவர்கள் உரிமையோடு சொன்னார்கள். அதே உணர்வோடுதான், நம் முதலமைச்சர் அவர்களும் இன்றைக்கு இவ்வளவு திட்டங்களை இஸ்லாமிய மக்களுக்காக தொடர்ந்து செயல்படுத்திக் கொண்டு இருக்கிறார். இப்படி, நம் திராவிட மாடல் அரசு என்றைக்கும் இஸ்லாமிய மக்களுக்கு உற்றத்துணையாக இருக்கும். நீங்களும் இந்த அரசுக்கு ஆதரவாக, உற்றத்துணையாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நலத்திட்ட உதவிகளைப் பெற்ற அத்தனைப்பேருக்கும் என் அன்பையும், வாழ்த்தையும் தெரிவிப்பதோடு, மீண்டும் என் ரமலான் வாழ்த்துகளையும் தெரிவித்து வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்திப் பேசினார்.

### பங்கேற்றவர்கள்

அமைச்சர்கள் ஆவடி நாசர், பி.கே.சேகர்பாபு, தமிழ்நாடு வக்பு வாரியத் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான நவாஸ்கனி, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், மாநில சிறுபான்மையினர் நல ஆணையத்தின் தலைவர் ஜோ.அருண், அரசின் தலைமை ஹாஜிக்கள் சலாவுதீன் முகமத் அயூப், குலாம் மெகதீகான், சட்டமன்ற உறுப்பினர் அப்துல் சமது, தமிழ்நாடு வக்பு வாரியத்தின் முதன்மைச் செயலாளர், செயல் அலுவலர் மருத்துவர் தாரேஸ் அகமது ஐ.ஏ.எஸ்., சென்னை மாநகராட்சியின் பணிகள் குழுத் தலைவர் நே.சிற்றரசு, மதன் மோகன், இறையன்பன் குத்தூஸ், எம்.கே. கான், சையத் ரகான், முகமது பசீர், எஸ்.கே.நவாஸ், பாத்திமா முசாபர், மருத்துவர் சுபைர்கான், ஆசியம் மரியம், பகுதிக் கழகச் செயலாளர் காமராஜ், ஜிவி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பிரகாஷ்,துணை அமைப்பாளர் இம்ரான், ஜிவி உள்பட பலரும் கலந்துகொண்டனர்.